முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.24.03.2026

O.S No. 324/2017

வா.சா.2-சஞ்சய் சங்கர்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கு சொத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியும். வழக்கு சொத்தின் நான்கு பக்கமும் வேலி இருக்கிறதா என்றால் இல்லை செடிகள் நான்கு பக்கமும் உள்ளது. வழக்கு சொத்தின் நான்கு பக்கமும் தானாக வளர்ந்த செடிகள் என்றால் சரி. அது போக நாங்களாக சில செடிகளை நட்டு வைத்து உயிர்வேலி அமைத்தோம். உயிர்வேலியில் நான் மரங்கள் இருப்பதாக சொல்லி இருப்பதில் என்னென்ன மரங்கள் என்றால் மஞ்சனத்தி, சீலாந்தி, எருக்கு, தெற்றிசெடிகள் இருந்தது. எண்ணிக்கை எனக்கு தெரியாது. பிரதிகள் அதனை சேதப்படுத்தி விட்டார்கள். பிரதிகள் சேதப்படுத்தியது போக மீதி செடிகள் உள்ளது. எனது முதல் சாட்சியத்தில் பிரதிகள் செடிகளை வெட்ட முயன்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றாலும் முழுமையாக வெட்டி எடுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றாலும் சரிதான். அத்விக் ஹார்டுவேர்ஸ் என்ற கடையை நான் நடத்தி வருகிறேன். அதில் ஸ்டீல் சிமெண்ட் போன்ற கட்டுமான பொருட்களை விற்பனை செய்கிறேன்.

தாவா சொத்தின் மேற்கு பக்கம் இடுவை உள்ளதா என்றால் இல்லை. தெற்கு பக்கம் இடுவை உள்ளது. அந்த இடுவையின் நீள அகலம் எனக்கு தெரியாது. தற்போது அதை ரோடாக மாற்றி விட்டார்கள். உயில்படி ஒரு கால்வாய் என் சித்தப்பா இடத்தில் உண்டு என்றால் சரியல்ல. அதில் 13 வது சரத்தில் கால் அமைத்து பாசனம் செய்ய இடையூறு செய்யகூடாது என்று உள்ளது. காலும் இல்லை பாசனம் செய்ய நீரும் இல்லை. உயில்படி என் அப்பாவும் சித்தப்பாவும் சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல.

உயில் சரத்துக்களை கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. கால் சம்பந்தமாக உயில் ஆவணத்தில் தவறான விவரங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. என் நிலத்திற்கு கிழக்கு பக்கமுள்ள போரிலிருந்து தண்ணீர் வருகிறது. அந்த போரினை நாங்கள் தான் அமைத்தோம்.

சொத்தில் சர்வே கற்கள் இல்லை என்றால் சரியல்ல. கிழக்கு பக்கம் 2 கற்கள் உள்ளது. யார் போட்டார்கள் என்றால் என் தாத்தா போட்டார்கள். எந்த வருடம் போடப்பட்டது என்றால் தெரியாது. கற்கள் அமைத்த போது உட்பிரிவு செய்து கற்கள் அமைத்தார்களா என்றால் இல்லை. 188/2 என்று எப்போது பிரிவு செய்யபட்டது என்றால் 1987 ல் நடந்த ரீசர்வேயின் போது உட்பிரிவு செய்ததாக கேள்வி பட்டேன் எனக்கு நேரடியாக தெரியாது. என் அப்பா சொத்தில் எத்தனை தென்னைமரம் உள்ளது என்றால் தெரியாது. என்னென்ன மரங்கள் உள்ளது என்றால் பலா, தென்னை உள்ளது தற்போது வாழை போட்டுள்ளோம். எங்கள் சொத்திற்கு மேற்கு பக்கம் மண்திட்டு போன்ற அமைப்பு உள்ளது என்றால் சரியல்ல.மேற்கு பக்கமுள்ள பூமியை விட எங்கள் பூமி 2 அடிக்கு தாழ்வாக உள்ளதால் அவ்வாறு தெரிகிறது.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இடங்கள் எனக்கு தெரிகிறதா என்றால் இல்லை. மேற்படி புகைப்படங்களில் ஒரு புகைப்படத்தில் ஒரு மஞ்சனத்தி மரத்தின் அருகில் மண்தட்டை அமைப்பு உள்ளது என்றால் சரியல்ல. அது மண்தட்டையே இல்லை மண்ணை குவித்து வைத்துள்ளார்கள். ஆனால் அது எங்கள் இடத்திற்கு உரியது இல்லை. தாவா இடமானது எங்கள் இடத்தை விட 2 அடி உயரத்தில் தான் உள்ளது. வழக்கு சொத்தில் எந்தவிதமான மரங்களோ செடிகளோ இருப்பதாக நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 7 வது

பக்கத்தில் முதல் பாராவில் கடைசி வரியில் உள்ளது. உயிர்வேலி அமைத்ததாக சொல்லப்படும் மரங்கள் ஆணையர் அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 7 வது பக்கத்தில் முதல் பாராவில் கடைசி வரியில் உள்ளது. உண்மையில் சிறுசெடிகள் மற்றும் சிறுமரங்கள் நீளமான அமைப்பில் உள்ளதாக சொல்லியுள்ளார் என்றாலும் நான் சொல்வதுபோல் அமைப்பு உள்ளதாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தின் எந்த பகுதியில் சிறுசெடிகள் மற்றும் சிறுமரங்கள் உள்ளது என்ற விவரத்தை ஆணையர் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல மேற்கு பகுதியை குறித்து அவர் சொல்லிவரும் பாராவில் தொடர்ச்சியாக சொல்வதால் அதனை மேற்கு பகுதி என்று எடுத்து கொள்ளலாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 3 வது பாயிண்ட்டிற்கு சொல்லபட்ட விளக்கம் தான் என்றால் சரி. அதில் வழக்கு பட்டிகை சொத்து ABGHA என்று காட்டபட்டுள்ளது என்றும் சிறு செடிகளும் புற்களும் காணப்பட்டதாக சொல்லபட்டுள்ளது என்றால் சரி. அதன் தொடர்ச்சியாக வழக்கு சொத்தின் மேற்கு பகுதி இந்த சொத்தை விட உயரமாக உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த உயரமான பகுதியில் இருந்து இயற்கையின் காரணமாக மண் சரிந்தும் வழிந்தும் கரைந்தும் வழக்கு பட்டிகை சொத்துக்குள் மண்கொட்டி வைத்தது போல் காணப்பட்டுள்ளது என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரி.

அதன் தொடர்ச்சியாக வழக்கு சொத்தில் சிறுமரங்கள் சிறு செடிகள் உள்ளதாக சொல்லியுள்ளாரே தவிர மேற்கு பக்கம் உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டு சிறுமரங்கள் சிறு செடிகள் எந்தபகுதியில் உள்ளதாக சொல்லாத நிலையில் எனது தகப்பனாருக்கு வழக்கில் ஆதாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை

சொத்தானது வாதியின் சொத்துடன் சேர்ந்து அடையாளம் காணமுடியாத நிலையில் ஒன்றாக கிடப்பதாக ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. ஆணையர் அறிக்கையில் 2 வகையான மண்திட்டு உள்ளதாகவும் அடையாளம் காணமுடியாத வகையில் ஒரே கண்டமாக உள்ளதாக முரணான கருத்துக்களை கூறியுள்ளார் என்றால் சரி. ஆணையரை விசாரித்தால் அறிக்கையில் உள்ள முரண்பாடுகளை தெளிவுபடுத்த முடியும் என்றால் எனக்கு தெரியாது. 30.9.2017 ல் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக சொல்லி இருப்பதில் நானோ என் அப்பாவோ அந்த நடவடிக்கையை புகைப்படம் எடுத்து காவல் துறையிடம் அல்லது வேறு துறையில் கொடுத்து நடவடிக்கை எடுத்தோமா என்றால் புகைப்படம் எடுக்கவில்லை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம்.

மண்தட்டை பகுதி தெற்கற்றத்தில் இருந்து எங்கள் சொத்தை கடந்து வடக்காக பிரதியின் சொத்தில் கிழக்கு அதிர்வில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 3.10.2017 ல் நான்பிரதிவாதியை பார்த்து பேசியதாக சொல்லியிருப்பதில் எங்கு வைத்து பேசி னோம் என்றால் எங்கள் தோட்டத்தில் வைத்து பேசினோம். நான் உடன் இருந்தேன் என் அப்பா பேசினார் நான் பேசவில்லை. 10.10.2017 ல் பிரதியின் இடத்தினை உழுததாக சொல்லியுள்ளேன். அதன் கிழக்கு அருகில் காய்பலன் தரும் தென்னைமரங்கள் வரிசையாக உள்ளது என்றால் சரி. அந்த தென்னைமரத்தின் கிழக்கு பக்கம் பிரதிவாதியின் மண்தட்டை அமைப்பு உள்ளது என்றாலும் மரத்திற்கும் மண்தட்டைக்கும் இடையே 6 அடி இடம் உள்ளது என்றால் சரியல்ல.

பிரதியின் தென்னைமரத்திற்கு கிழக்கு பக்கம் 1.6 மீட்டர் இடம் அவருக்கு உள்ளது. அந்த 1.6 மீட்டர் இடத்தை தான் என் அப்பா வழக்கு பட்டிகையாக கேட்கிறார் என்றால் சரி.

எங்கள் மரம் எங்களது அதிர்வில் இருந்து எவ்வளவு துாரத்தில் உள்பக்கமாக வைத்துள்ளோம் என்றால் தெரியாது. சுமார் 10 அடி இடம் இருக்குமா என்றால் தெரியாது. நாங்கள் வைத்துள்ள தென்னைமரங்களின் இரண்டு மரங்களுக்கு இடையே 25 அடி இடம் இருக்குமா என்றால் இல்லை 15 அடி இருக்கும். 2 தென்னைமரங்களில் உள்ள தென்னை மட்டைகள் ஒன்றை ஒன்று உரசுமா என்றால் தெரியாது. 188/1 சர்வே எண்ணில் உள்ள இடத்தை அளந்து பார்த்தோமா என்றால் பார்த்தோம். அந்த இடத்தின் பரப்பளவு என்ன என்றால் 87.6 ஏர் ஆகும். அந்த சொத்தின் மேற்கே கால்வாய் உள்ளது என்றாலும் அதனை பாதையாக தற்போது மாற்றப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. அதனை தனியார் சர்வேயரின் உதவியுடன் அளந்தோம். எந்த தேதியில் அளந்தோம் என்றால் தெரியாது. வழக்கிற்கு முன்பா பின்பா என்றால் வழக்கின் பின்பு அளந்தோம். அளப்பதற்கு முன்பாக சொத்தின் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு செய்தோமா என்றால் குமரேசன் வாத்தியாருக்கு வாய்மொழியாக சொன்னோம் எழுத்துபூர்வமாக அறிவிப்பு கொடுக்கவில்லை. எந்த தேதியில் சொன்னோம் என்றால் தெரியாது.

வழக்கிற்கு பின்பு குமரேசன் வாத்தியார் எங்களுடன் சுமூகமாக இருந்தாரா என்றால் சுமூகமாக இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கபட்டிருந்த போதும் தனி நபர் மூலம் அளக்க என்ன காரணம் என்றால் எங்களது எல்கையை தெரிந்து கொள்ள அளந்தோம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனக்கோ என் அப்பாவிற்கோ சொத்தின் எல்கை தெரியாது என்றால் சரியல்ல. மேற்கில் கல் இருந்தது. தற்போது அந்த கல் இல்லை. 30.9.2017 ல் அந்த கற்கள் இல்லை. வழக்கிற்கு பின்பு நாங்கள் அளந்தபோது கல் இருந்ததாக நான் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களது இடத்தில் மேற்கருகில் பலாமரம் உள்ளது என்றால் சரி. அந்த மரத்திற்கு 40 வயது இருக்குமா

என்றால் தெரியாது. அந்த பலாமரத்தில் இருந்து மேற்குபக்கமுள்ள மண்தட்டை இடத்திற்கு எவ்வளவு இடம் உள்ளது என்றால் தெரியாது.

அந்த பலாமரத்தின் கொப்புகள் பிரதியின் இடத்திற்குள் உள்ளது என்றால் ஒருசில சிறிய பகுதிகள் உள்ளது. அந்தமரத்திற்கும் எங்கள் இடத்தின் எல்கைக்கும் இடையே சுமார் 6 அடி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பலாமரத்தின் அமைப்பிற்கும் அதன் நீளஅகலம் குறித்து என்னால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. உண்மையில் பிரதியின் அனுமதிகேட்டு அளக்கவில்லை என்றாலும் அவரைஅனுமதி கேட்டு அளந்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதியிடம் அதிகமாக சொத்து உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரி. அதன் காரணமாக தான் இந்த வழக்கை என் அப்பா தாக்கல் செய்தாரா என்றால் சரி. பிரதியின் சொத்தானது 45 மீட்டர் இருக்கவேண்டும் ஆனால் அவருக்கு 50 மீட்டர் உள்ளது எனவே அதிகபடியான சொத்துக்கள் இருப்பதாக சொல்லியுள்ளேன். எங்களது சொத்தை பிரதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லவில்லை என்றால் சரி. தாவா சொத்து ஆக்கிரமிப்பு இடம் இல்லை என்றால் சரி. மரங்கள் இருந்ததாகவோ உயிர்வேலி வெட்டப்பட்டதாகவோ புகைப்படங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

2017, 7 வது மாதம் என்அப்பா காவல்நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் சரி ஆனால் தேதி மாதம் ஞாபகமில்லை. கொடுத்த புகாரில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கண்காணிப்பாளரிடம் என் அப்பா புகார் கொடுத்தார் என்றால் சரிதான் யாரிடம் கொடுத்தார் என்று தெரியாது. மேல்அதிகாரிக்கு கொடுத்த புகாரின் பேரில் காவல் துணைகண்காணிப்பாளர் விசாரித்தார் என்றால் எனக்கு தெரியாது நான் செல்லவில்லை. புகார் கொடுத்த எத்தனை நாள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றால்

தெரியாது. காவல்நிலைய புகார் குறித்த விவரங்களை என் அப்பாவோ நானோ சொல்லவில்லை என்றால் நான் சொல்லவில்லை என் அப்பா சொன்னாரா என்று எனக்கு தெரியாது. புகாரை சொல்லாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. 5 மீட்டர் பாதை இருப்பதாக சொல்லியிருப்பதில் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. 5 மீட்டர் பாதையை நான் அளந்து பார்த்தேனா என்றால் 3.10.2017 அன்று அளந்தேன். வழக்கிற்கு பின்னிட்டு அளந்ததாக நான் சொல்லியது பொய் என்றால் சரியல்ல. சாட்சி தற்போது சரி என்று கூறுகிறார்.

எனது வாக்குமூலத்தில் 7 வது பாராவில் உள்ள விவரங்களை எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சர்வே பிளான் அடிப்படையில் சொல்லியுள்ளேன், சர்வே எண்ணே எனக்கு தெரியாத நிலையில் எதன் அடிப்படையில் அந்த விவரங்களை சொன்னேன் என்றால் சர்வே செய்த நபரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன். சர்வே செய்தவரின் பெயர் ராதாகிருஷ்ணன் அவரது அலுவலகம் வல்லன்குமாரன்விளையில் உள்ளது. எனவே 7 வது பாராவில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. ஏற்கனவே பாதையாக மாற்றி வேறு சப்டிவிசன் உட்பிரிவு செய்ததாக சொல்லியிருப்பது அனுமானத்தின் பெயரில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரி. அதற்கான அடிப்படையான ஆவணம் எதுவும் என்னிடம் இருக்கிறதா என்றால் இல்லை.எனக்கு எந்த விவரமும் தெரியாமல் என் அப்பா சொன்னதன் அடிப்படையில் இந்த வழக்கில் வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு 77 வயது இருக்கும். அவர் எந்தவிதமான அடாவடிதனமான நடவடிக்கையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி அளக்ககூடாது என்று எங்களிடம் தர்க்கம் செய்தார் என்றால் சரியல்ல. அவர் எந்தவித பிரச்சனையும்

அளக்கும்போது செய்யவில்லை. எதற்காக காவல்நிலையத்தில் என் அப்பா புகார் கொடுத்தார் என்றால் எங்கள் எல்கையை வெட்டி அழித்ததால் புகார் கொடுத்தார். வருவாய்துறையில் எல்கையை நிர்ணயம் செய்ய மனு கொடுத்தோமா என்றால் தெரியாது. நான் Ph.D. bio technology படித்துள்ளேன். சொத்தின் எல்கை குறித்தும் உட்பிரிவு செய்ய எந்த அதிகாரிக்கு மனு கொடுக்க வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் வருவாய் துறையில் சர்வேயரிடம் கொடுக்க வேண்டும். அந்த துறைக்கு என் அப்பா மனு கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது. தனியாரை வைத்து என் அப்பா நிலத்தை அளவீடு செய்த போது சர்வேயரின் மூலம் அளவீடு செய்ய அறிவுறுத்தினேனா என்றால் இல்லை.

பிரதியை துன்புறுத்தி அவரிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மண்கட்டை இருப்பதை மறைத்து உயிர்வேலி மரங்களை பிரதிவாதி சேதப்படுத்தியதாக பொய்யான காரணம் கூறி இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2010 ல் படிப்பை முடித்து ராஜாக்கமங்கலம் ரிசர்ச் சென்டரில் 2011 வரைவேலை பார்த்தேன். பின்பு உதயா கல்லூரியில் உதவி பேராசிரியராக வேலை பார்த்தேன். பின் பெங்களூரில் 6 மாதம்வேலை பார்த்தேன். அதற்கு பின்பு ஊரில் வேலை பார்த்து வருகிறேன். 2017 காலகட்டத்தில் ஊரில்தான் வசித்து வந்தேன் என்றால் சரி. என் அப்பா ஒரு அரசு குற்றதொடர்பு துறை மாநில உயர் அலுவலராக பதவி வகித்தவர் என்றால் சரி. அவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றி நாகர்கோவிலில் ஓய்பு பெற்றார் என்றால் சரி. அதனால் அவருக்கு காவல்துறையினர் மரியாதை கொடுப்பார்கள் என்றால் ஓய்வுக்கு முன்புவரை அந்த பணிக்கான மரியாதை கொடுப்பார்கள்.

அரசு அலுவலர்களிடம் என் அப்பாவிற்கு மிகுந்த செல்வாக்கு உள்ளது என்றால்

சரியல்ல. அந்த செல்வாக்கை பயன்படுத்தி என் அப்பா காவல்துறையில் பிரதி மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு காவல்துறையினர் மூலம் மிரட்டி வாங்கமுடியாததை வழக்கறிஞர் என்ற போர்வையில் இந்த வழக்கை தாக்கல் செய்து பிரதை மிரட்டி வருகிறார் என்றால் சரியல்ல.